1982 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 10 கோடி மதிப்பீட்டில் மாருதி கன்சல்டன்ட் என்ற நிறுவனத்தின் மூலம் டிட்கோ நிறுவனம்தான் இதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. தொழிற்சாலை துவங்க இருக்கும் பகுதிகளை ஆய்வு செய்கின்ற நேரத்தில், பல்வேறு உலக நாடுகளில் இருந்தும் அங்கு வந்து தங்குகின்ற ஏராளமான பறவைகள் பாதிக்கப்படக் கூடாது என்ற காரணத்தால், பம்பாயில் உள்ள சம்பந்தப்பட்ட சொசைட்டியோடு தொடர்பு கொண்டு விவரங்கள் கேட்கப்பட்டன. அதுகுறித்து விவரங்கள் முழுமையாக இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் பல பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. அந்தப் பறவைகள் தங்கும் பகுதிகள் அப்படியே விடப்பட வேண்டும் என்பதுதான் அவர்கள் செய்துள்ள சிபாரிசு.

எனவே இப்போதுள்ள பிரச்னை என்னவென்றால், கிட்டத்தட்ட 1 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்புள்ள அந்தப்பகுதி முழுவதும் அப்படியே பறவைகளுக்கு விடப்பட வேண்டுமா அல்லது, பறவைகளின் தேவைகளுக்குப் போக, மிச்சமுள்ள நிலங்களில் இந்த உப்பு தயாரிக்கும் அல்லது உப்பு சார்ந்த பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவங்கலாமா என்பது குறித்து தான். அதை இப்போது ஆய்வு செய்து வருகிறோம். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இருஷ்டியான்பேட்டை அருகே வெடிமருந்து தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 278—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் கிருஷ்டியான்பேட்டை அருகில் வெடிமருந்து தொழிற்சாலை அமைக்கப்போவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

(இ) எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்படும்?

(ஈ) மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வடாற்காடு மாவட்டம் கிறிஸ்டியான் பேட்டை அருகிலே வெடி மருந்துத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் இல்லை. ஆனால் அதே மாவட்டத்தில் காட்பாடி அருகில் உள்ள பனமடங்கி என்ற இடத்தில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 15,000 டன் வெடி மருந்துகள் தயாரிக்கின்ற அந்தத் தொழிற்சாலை ஸ்வீடன் நாட்டின் ஒத்துழைப்போடு துவங்கப்படவிருக்கிறது. கிட்டத்தட்ட 500 பேர்களுக்கு அந்தப் பகுதியிலே வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

[1982 பிப்ரவரி 19

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டபோது கிறிஸ்டியாவ பேட்டை பகுதி என்று அறிவித்தார்கள். இப்போது பனமடங்கி என்ற இடத்தில் ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி என்றால், பனமடங்கிப் பகுதியிலுள்ள அந்த நிலம் ஆய்வு செய்யப்பட்டு, அர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதா; இரண்டாவதாக, அந்த வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையை வேறொரு நாட்டுடன் சேர்ந்து தயாரிக்கப் போவதாகச் சொன்னார்கள். மைய அரசு ஸ்வீடன் நாட்டுடன் சேர்ந்து அதை ஆரம்பிக்கப் போகிறார்களா? அல்லது மாநில அரசே எடுத்து இம்மாதிரி செய்யப்போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இந்தத் தொழிற்சாலைத் துவங்கும்போது சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. இது வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை என்பதால் சுற்றி கிராமப்புறங்களில் மக்கள் வாழ்கிற பகுதி, தொலைதூரத்தில் உள்ள வனப்பகுதி, அதேபோறு மேட்டுப்பாங்கான, பள்ளங்கள் நிறைந்த பகுதி போன்ல் இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு அந்தப் பகுதி தேர்வு செய்யப்பட்டது. அப்படி தேர்வு செய்த அடிப்படையில்தான் காட்பாடி பகுதி தேர்வு செய்யப்பட்டது. இந்த அமைப்பு, தமிழ்நாட்டு நிறுவனமான டிட்கோ ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்போடு இந்தத் தொழிற்சாலை இருபது கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்பட இருக்கிறது. தனியாக தமிழ்நாடு தொழில் இயல் வெடிமருந்து நிறுவனம் என்ற நிறுவனம் தோற்றுவிக்கப்பட அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அமைப்பின், அப்படிப்பட்ட நிறுவனத்தின் பெயரில் இந்தத் தொழிற்சாலை கட்டபடும், நிர்வகிக்கப்படும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : நான் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய, மாநில அரசுக்கு இல்லை என்ற நிலையில்தான் அவர்கள் பதில் வந்திருக்கிறது. தனி நிறுவனம் என்று சொல்கிறார்கள். அப்படி தனி நிறுவனம் நிறுவப்பட வேண்டுமென்று சொன்னால் என்னுடைய வேண்டுகோள் எல்லாம் அந்த பனைமடங்கி வட்டாரத்தில் மலைகள் அதிகமாக இருப்பதால் விவசாயம் செய்யக்கூடிய நிலங்களாக இல்லாமல் காட்டுப் பகுதியை இந்தத் தொழிற்சாலைக்காக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலையில் இடம் ஆய்வு செய்யப்படுகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மத்திய அரசினுடைய நேரடி முதலீடுதான் இல்லை என்று சொன்னேனே தவிர, மாநில அரசின் நிறுவனமான டிட்கோதான் நடத்துவார்கள் ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்புடன் என்று சொன்னேன். மாநில அரசுதான் இந்தத் தொழிற்சாலையைப் போடுகிறது. பலயிடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அதில் காட்பாடி பகுதி தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

1982 பிப்ரவரி 19]

திரு. உ. சுப்பிரமணியன் : இந்தத் தொழிற்சாலை முதலில் இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது. சாயலோடைக்கரை என்ற பகுதியில் நிலம் எல்லாம் பார்த்து முடிவு செய்யப்பட்டு பிறகு வடாற்காடு மாவட்டத்திற்கு எப்படி மாற்றப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையைத் போடுவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்கள் என்னிடம் இல்லை. நான் அப்படி அறிவித்ததாகவும் எனக்கு நினைவில்லை. நான் முன்னாலேயே இந்தத் தொழிற்சாலை பற்றி பேசியபோது வட ஆற்காடு மாவட்டத்தில் வரும் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. பின்தங்கிய மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்பின் பேரில் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஒத்துழைப்பு என்றால் பைனான்ஷியல் ஒததுழைப்பா அல்லது டெக்னிக்கல் கொலாபரேஷனா? எப்படிப்பட்ட ஒத்துழைப்பு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : டெக்னிக்கல் ஒத்துழைப்புதான்.

அலிவலம், ஆண்டிவயல் கிராம ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் திட்டம்.

* வின எண் 279—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணித் தொகுதி அலிவலம் மற்றும் ஆண்டிவயல் அரிசன நலப்பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஆம். தஞ்சாவூர் மாவட்டம பேராவூரணித் தொகுதியில் உள்ள அலிவலம் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு ரூ. 60,000 மதிப்பீட்டுச் செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. ஆண்டிவயல் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு ரூ 60,000 மதிப்பீட்டில் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS